


# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) ஈரோடு மாவட்டம்

## கவுந்தப்பாடி ஊராட்சி

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், கவுந்தப்பாடி ஊராட்சி மற்றும் கிராமம், ரீ.ச.எண் - **548 / 1B ,1C 1D** - ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லா பகுதி).

அளவு : 1:400

இணையவழி விண்ணப்ப எண் : S03XMAQ2 & நாள்-19.09.2022

**குறிப்பு :**

வ

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு | : 5648.00 ச.மீ | |
| ஒதுக்கிய மனைகள் | : 20 | |
| மனைப்பிரிவின் எல்லை | ................................ | (சிவப்பு கோடு) |
| நிலையிலுள்ள சாலை | ................................ | (மஞ்சள்) |

**பொது ஒதுக்கீடு**

**உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை**

மனைப்பிரிவின் சாலை பரப்பு : 1041.39 ச.மீ

பூங்கா : (மனைப்பிரிவின் பரப்பு- மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) x10%
: (5648 - 1041.39= 4606.61) x 10% = 460.66 ச.மீ

பூங்கா பரப்பு : 460.66 ச.மீ(10.00%) (மனுதாரரால் அரசு வழிகாட்டி மதிப்பீடு தொகை செலுத்தப்பட்டுள்ளது)

பொது உபயோகம்-A : 28.99 ச.மீ (0.62%) ..............................

( தான ஆவண எண் - 4448/2022 மற்றும் நாள் : 27.10.2022 )

**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்காக உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:**

பொது உபயோகம்-B : 29.17 ச.மீ (0.63%) ................................

( தான ஆவண எண் - 4446/2022 மற்றும் நாள் : 27.10.2022 )

**கட்டிட வரம்பு :**

9.0மீ வரை அகலம் கொண்ட சாலைகளுக்கு 1.50 மீ விடப்படல் வேண்டும்

9.0மீ க்கு மேல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0 மீ விடப்படல் வேண்டும்

**மூலை முடக்கு:**

12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீx1.50மீ விடப்படல் வேண்டும்.

**நிபந்தனைகள்**

1. அரசாணை எண் 18, ந. நி (ம) கு. வ. துறை, (MA-1) நாள்: 04.02.2019, அரசாணை எண் 16, ந. நி (ம) கு. வ. துறை (MA-1) நாள்: 31.01.2020-ஆகியவற்றின்படி மனைப்பிரிவில் அமையும் சாலைகள், பொது உபயோகம் (**a**) உள்ளாட்சிக்கும் மற்றும் பொது உபயோகம் (**b**) பரப்பினை TANGEDCO ற்கும் தானமாகப்பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண் 181, வீ.வ (ம) ந.வ.துறை, நாள்: 09.12.2020-ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் (ம) தெருவிளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. அரசாணை எண்-141 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.16.07.2022-ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வெண்டும்.
4. இம்மனைப்பிரிவிற்கு ஊராட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தில் எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்டவருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், கவுந்தபாடி ஊராட்சி தலைவர் அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பரிவு நுழைவாயிலில் **6'x 4'** அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
8. மனைகளின் ஊடே செல்லும் குறைந்த மின்னழுத்தக் மின கம்பி பாதையை மனைப்பிரிவு சாலைக்கேற்ப மாற்றி அமைக்கப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
9. உத்தேச மனைப்பிரிவு சாலைக்கு மனுதாரர் தார் சாலை அமைக்கப்பட்டு (BDO/UE) வட்டார வளர்ச்சி அலுவலர் யூனியன் பொரியாளர் அவர்களிடம் தரம் குறித்த தகுதிச்சான்று பெறப்பட்ட பின்னர் உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கப்படும்.

SWP/DTCP/ERODE/LAYOUT APPROVAL No : 02 / 2023

*Signature Not Verified*

*Signed by: Assistant Director*
*Location:Erode*
*Date:2023.01.05 9:39:40*

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,(பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.